ஸ்ரீமதே இராமானுஜாய நம:

# பெரியாழ்வார் திருமொழி 2-1
## மெச்சூது
(பூச்சிகாட்டி விளையாடுதல்)

118 மெச்சூது சங்கம் இடத்தான் * நல்வேயூதி *
பொய்ச் சூதில் தோற்ற * பொறையுடை மன்னர்க்காய் **
பத்தூர் பெறாது அன்று * பாரதம் கைசெய்த *
அத்தூதன் அப்பூச்சி காட்டுகின்றான் * அம்மனே
அப்பூச்சி காட்டுகின்றான் (1)

119 மலைபுரை தோள் மன்னவரும் * மாரதரும் மற்றும் *
பலர் குலைய * நூற்றுவரும் பட்டழிய ** பார்த்தன்
சிலை வளையத் * திண்தேர் மேல் முன்னின்ற * செங்கண்
அலவலை வந்து அப்பூச்சி காட்டுகின்றான் * அம்மனே
அப்பூச்சி காட்டுகின்றான் (2)

120 காயும்நீர் புக்குக் * கடம்பேறி * காளியன்
தீய பணத்தில் * சிலம்பார்க்கப் பாய்ந்தாடி **
வேயின் குழலூதி * வித்தகனாய் நின்ற *
ஆயன் வந்து அப்பூச்சி காட்டுகின்றான் * அம்மனே
அப்பூச்சி காட்டுகின்றான் (3)

121 இருட்டில் பிறந்து போய் * ஏழை வல்லாயர் *
மருட்டைத் தவிர்ப்பித்து * வன்கஞ்சன் மாளப் **
புரட்டி அந்நாள் எங்கள் * பூம்பட்டுக் கொண்ட *
அரட்டன் வந்து அப்பூச்சி காட்டுகின்றான் * அம்மனே
அப்பூச்சி காட்டுகின்றான் (4)

122 சேப்பூண்ட * சாடு சிதறி * திருடி நெய்க்கு
ஆப்பூண்டு * நந்தன் மனைவி கடை தாம்பால் **
சோப்பூண்டு துள்ளித் * துடிக்க துடிக்க * அன்று
ஆப்பூண்டான் அப்பூச்சி காட்டுகின்றான் * அம்மனே
அப்பூச்சி காட்டுகின்றான் (5)

123 செப்பிள மென்முலைத் * தேவகி நங்கைக்கு *
சொப்படத் தோன்றித் * தொறுப்பாடியோம் வைத்த **
துப்பமும் பாலும் * தயிரும் விழுங்கிய *
அப்பன் வந்து அப்பூச்சி காட்டுகின்றான் * அம்மனே
அப்பூச்சி காட்டுகின்றான் (6)

124 தத்துக் கொண்டாள் கொலோ * தானே பெற்றாள் கொலோ *
சித்த மனையாள் * அசோதை இளஞ்சிங்கம் **
கொத்தார் கருங்குழல் * கோபால கோளரி *
அத்தன் வந்து அப்பூச்சி காட்டுகின்றான் * அம்மனே
அப்பூச்சி காட்டுகின்றான் (7)

125 கொங்கை வன் * கூனி சொற்கொண்டு * குவலயத்
துங்கக் கரியும் * பரியும் இராச்சியமும் **
எங்கும் பரதற்கருளி * வன் கானடை *
அங்கண்ணன் அப்பூச்சி காட்டுகின்றான் * அம்மனே
அப்பூச்சி காட்டுகின்றான் (8)

126 பதக முதலை வாய்ப் * பட்ட களிறு *
கதறிக் கை கூப்பி * என் கண்ணா கண்ணா என்ன **
உதவப் புள்ளூர்ந்து * அங்கு உறுதுயர் தீர்த்த *
அதகன் வந்து அப்பூச்சி காட்டுகின்றான் * அம்மனே
அப்பூச்சி காட்டுகின்றான் (9)

127 வல்லாள் இலங்கை மலங்கச் * சரந்துரந்த *
வில்லாளனை * விட்டுசித்தன் விரித்த **
சொல்லார்ந்த அப்பூச்சிப் * பாடல் இவை பத்தும்
வல்லார் போய் * வைகுந்தம் மன்னி இருப்பரே (10)